**ஹொரண நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹொரண நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள ஹொரண நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மின்சார இருப்பு, அச்சிடல் இருப்பு, ஆயுர்வேத மருந்து மற்றும் காகிதாதிகளின் இருப்பு என்பவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 4,234,682 இறுதி இருப்பு பெறுமதியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட போதிலும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் | இருப்புக்கள் FIFO முறைமையில் கணக்கீடு செய்யப்பட்ட போதிலும் சில இருப்புக்கள் அவ்வாறு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 5.11 இன் பிரகாரம் FIFO முறைமையை பயன்படுத்தி இருப்பு மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணான வகையில் இறுதி இருப்பு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.29 இன் பிரகாரம் நிலையான வைப்புக்களில் தேறிய ரூபா 6,906,697 பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அப்பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை மேலும் ஆண்டில் காசாக கிடைத்த வட்டி வருமானமான ரூபா 4,500,785 பெறுமதி முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் கிடைத்த வட்டிப் பணமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன்படி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வெளிவாரி நிதிஏற்பாட்டின் கீழ் கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய மூலதன மானியம் ரூபா 12,433,218 வேலைக் கடன்பட்டோர் சொத்துக்கள் மற்றும் விரிவான வருமான கூற்றில் வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | வெளி நிறுவனங்களிலிருந்து கிடைக்கின்ற பணம் பொதுவைப்பின் ஊடாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் வெளிவாரி நிதிஏற்பாட்டின் கீழ் கிடைத்த ரூபா 10,747,603 வேலைகள் காசுப் புத்தகத்தில் பெறுவனவாக பதியப்பட்ட போதிலும் கடன்பட்டோர் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வேலைகளுக்காக கிடைக்க வேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 1,685,733 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,694,333 ஆக காண்பிக்கப்பட்டமையால் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 8,440 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் வெளிவாரி நிதியேற்பாட்டின் கீழ் கடன்கொடுத்தோருக்காக செலுத்தப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 20,258,265 கடன்கொடுத்தோர் கணக்கிற்கும் அதன் மூலம் உருவாகின்ற சொத்துக்கள் வீதிகள் மற்றும் மதகுகளின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களாக 2021 ஆம் ஆண்டு முதல் சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (உ) | நிதிஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 12 செயற்திட்டங்களுக்கான கடன்கொடுத்தோராக ஒதுக்க வேண்டிய ரூபா 7,825,047 இற்கு பதிலாக ரூபா 8,050,000 ஒதுக்கப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோராக செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஒதுக்கப்பட்ட போதும், பணம் செலுத்துகின்ற சந்தர்ப்பத்தின் போது முழுமையாக பணம் செலுத்தாதிருந்தமைக்கான காரணமாகும். | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 42,228 தொகையான 50 பிளாஸ்டிக் கதிரைகள் நிதிக்கூற்றுக்களில் அலுவலக உபகரணங்கள் மற்றும் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் கிடைத்த வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டில் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணம் மற்றும் கணனிகளை கொள்வனவு செய்தல் ரூபா 1,692,565 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,492,565 ஆக ரூபா 200,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஏ) | மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 95,275,657 இற்கு பதிலாக அது ரூபா 69,231,790 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களில் மோட்டார் வாகனத்தின் பெறுமதி ரூபா 26,043,867 மற்றும் ஒதுக்க பெறுமதி என்பன அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | இயந்திரங்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 6,638,500 இற்கு பதிலாக ரூபா 7,288,690 ஆக பதியப்பட்டமையால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் இயந்திரப் பெறுமதி ரூபா 650,190 மற்றும் ஒதுக்க பெறுமதி என்பன அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஒ) | ஓய்வூதிய பணிப்பாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா 9,400 இற்கு பதிலாக கடன்கொடுத்தோராக ரூபா 40,492 கணக்கீடு செய்யப்பட்டமையால் செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 31,092 அதிகரித்து பதியப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஓ) | மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண சிட்டையிடல் பெறுமதி ரூபா 15,000,000 நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | வருடாந்த சிட்டையிடல் உள்ளடக்கப்படுமாயின் நிதிக்கூற்றுக்களில் வருமானம் அசாதாரணமாக அதிகரித்து காண்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அட்டுறு அளவை உள்ளபடியாக பெற்று வருடாந்த கணக்கில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |
| (ஔ) | மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் கிடைத்த வருமானத்தின் கீழ் வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் ரூபா 915,749 இற்கு பதிலாக ரூபா 136,688 ஆக பதியப்பட்டமையால் வருமானம் ரூபா 779,061 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (க) | பௌதீக சீராக்கல்கள் வீதிகளின் கீழ் வேலை குறிப்பு இலக்கம் 07 இல் ஏனைய விற்பனை வருமானமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 225,100 பதிவதற்கு பதிலாக அது ரூபா 443,014 ஆக பதியப்பட்டமையால் ரூபா 217,917 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (கா) | பொது நிர்வாக நிகழ்ச்சித் திட்டம் இலக்கம் 01 இல் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினங்களின் பெறுமதி ரூபா 1,316,956 ஆக இருந்த போதிலும் அது ரூபா 400,981 ஆக காண்பிக்கப்பட்டமையால் செலவினம் ரூபா 915,975 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (கி) | சபைக்குச் சொந்தமான 44 காணிக்கூறுகளின் பெறுமதியான ரூபா 2,352,761 மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 305,500,000 தொகைகள் மதிப்பீட்டு திணைக்களத்திலிருந்து முறையான மதிப்பீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு பதிலாக சபை உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய இணக்க குழுவின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்களை மதிப்பீடு செய்து 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கீ) | நகர சபை அலுவலக கட்டிடம் நிலையான சொத்துப் பதிவேட்டின் கிரயம் ரூபா 307,757,445 ஆக இனங்காணப்பட்ட போதிலும் சபையின் மதிப்பீட்டு சபையால் அது ரூபா 30,000,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டமையால் ரூபா 277,757,445 குறைத்து பதியப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கு) | கழிவுப்பொருள் முகாமைத்துவ பிரிவில் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் பணமாகவும் நன்கொடையாகவும் கிடைத்த டெக்டர் மற்றும் டிறெயிலரின் பெறுமதி ரூபா 1,965,400 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாக ரூபா 1,900,000 ஆக ரூபா 65,400 குறைத்து பதியப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (கூ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஊழியர் சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 110,893,271 ஆக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அப்பெறுமதி ரூபா 111,067,451 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் வருமானம் ரூபா 174,179 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (கெ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய உறுப்பினர் படிகள் ரூபா 195,000 தொகை 2021 சனவரி 06 ஆந் திகதி சபைக்கு கிடைத்திருந்த போதிலும் அப்பெறுமதி | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | இறுதிக் கணக்குகளில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (கே) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 4,090,730 ஆக கணக்குகளில் சீராக்க வேண்டியிருந்த போதிலும் அப்பெறுமதி ரூபா 5,026,395 ஆக சீராக்கப்பட்டமையால் ஆண்டின் வருமானம் ரூபா 935,665 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (கை) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்பு ரூபா 53,233,773 ஆக நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி ரூபா 52,547,256 ஆக காண்பிக்கப்பட்டமையால் அப்பெறுமதி ரூபா 686,517 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 735,087 ஆக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி ரூபா 360,947 ஆக காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 374,140 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்குமிடையே ரூபா 980,887 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 35,107,130 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்விற்கு | எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற கணக்கு மீதிகளை |

| | | |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,320,659 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,703,016 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வறுமையை ஒழிக்கும் உபாய வழிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 04 வியாபாரக் கொட்டகைகள் ரூபா 574,000 செலவில் சபையினால் நிர்மாணிக்கப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது ரூபா 3,984 வீதம் 36 தவணைகளில் வாடகையாளர்களால் செலுத்த வேண்டியிருந்தும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வறுமையில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவதற்காக குறைந்த வருமானம் பெறும் 04 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு பால் / கஞ்சி செயற்திட்டத்திற்காக இந்த வியாபாரக் கொட்டகைகள் வழங்கப்பட்டு ஒரு நபரினால் ரூபா 7,000 வாடகையாக செலுத்துவதற்கும், குறைந்த வருமானம் பெறுபவர்களால் இந்த தொகை செலுத்த முடியாததாக சபையிடம் முறையிட்டதன் பிரகாரம் எதிர்காலத்தில் சபைக்கு அனுப்பி தீர்மானம் எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் வியாபாரக் கொட்டகை களுக்காக வாடகையாளர் களினால் பணம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | பழைய நகர சபைக் கட்டிடத்தின் அருகில் உள்ள பால் விற்பனை கூடத்தை பெற்ற நபரால் அந்த பால் விற்பனை கூடம் | பால் விற்பனை கூடத்தை பெற்ற நபர் எந்தவொரு அறிவித்தலுமின்றி மூடியிருந்ததுடன் அதனை மீண்டும் பொருட்களுடன் | சபையிலிருந்து வழங்கப்பட்டிருந்த உபகரணங்களை சபைக்கு மீளக் கையளிப்பதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | மூடப்பட்டிருந்ததுடன் அதில் காணப்பட்ட சபையினால் வழங்கப்பட்ட வாயு அடுப்பு துருப்பிடித்தமையால் அதன் நட்டத்தை உரிய நபரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வேறொவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் வாடகைக்கு வழங்கப்பட்ட 04 பால் விற்பனை கூடங்களில் இருந்து 2020 இன் இறுதி வரையிலும் அறவிட வேண்டிய ரூபா 90,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் வியாபாரக் கொட்டகையை திறந்து வேறொரு நபருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் அவரும் குறைந்த வருமானம் பெறுபவராக இருந்தமையால் தீர்மானம் சபைக்கு அனுப்பப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | வாடகையாளரிடமிருந்தும் அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்துடன் 03 வருடங்களுக்காக உடன்படிக்கை செய்து அந்த நிறுவனம் 2018 ஆம் ஆண்டின் போது உள்ளுராட்சி முறைமையை அறிமுகப்படுத்தியிருக்கும் போது மீண்டும் 2019 ஆம் ஆண்டின் போது இன்னுமொரு கணனி முறைமையை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. | தாபிக்கப்பட்ட கணனி மென்பொருள் முறைமையின் செயற்படு நிலையின் அடிப்படையில் புதிய கணனி முறைமையை தாபிப்பதற்கு ஏற்பட்டிருந்தது. | தாபிக்கப்பட்ட கணனி முறைமையின் செயற்படு நிலை தொடர்பாக சரியான ஆய்வின்றி இன்னுமொரு கணனி முறைமை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியாது. |
| (ஈ) | புதிய கணனி முறைமை தாபிக்கும் போது அதற்காக தகைமை பெற்ற 02 நிறுவனங்களிலிருந்து தேவையான மாதிரிகள் தயாரித்து தருமாறு கோரிக்கை இடப்பட்ட போதிலும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து மாத்திரம் மாதிரிகள் கிடைத்திருந்தது. | சபையினால் ஒரு நிறுவனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் மாதிரிகள் தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதற்காக தகைமை பெற்ற 02 நிறுவனங்கள் மூலம் மாதிரிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மேற்கூறப்பட்ட கொள்வனவுகளுக்காக இரண்டு நிறுவனங்களிலிருந்து கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,088,000 ஆன ஆகக்குறைந்த விலை கவனத்தில் கொள்ளாமல் ரூபா 5,885,000 ஆன | சபையின் தொழில்நுட்ப மாதிரிகளின் பிரகாரம் மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பொதுக்கூட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த விலை கவனத்தில் கொள்ளாமல் கைவிடப்பட்டமைக்கான காரணம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் |

| | | | |
|---|---|---|---|
| | விலையில் உரிய சேவை நெக்பா அவுஸ்ரேலியா தனியார் கம்பனியிலிருந்து பெற்றுக்கொள்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தீர்மானம் எடுத்திருந்தது. | | சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | இந்த மென்பொருள் முறைமையை தாபிப்பதற்காக 2020 மார்ச் மாதத்தின் போது ரூபா 2,992,475 தொகை செலுத்தப்பட்ட போதிலும் அதனை செலுத்துவதற்கு முன் தாபிக்கப்பட்ட முறைமையின் வெற்றிகரமான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. | முறைமையின் வெற்றிகரமான தன்மை தொடர்பாக ஒரே தடவையில் மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் தரவுகளை உள்ளடக்கியதன் பின்னர் செயற்பாட்டு நிலைமையை பரீட்சித்து உரிய உத்தியோகத்தர்களின் உறுதிப்படுத்தல் பெறப்பட்டுள்ளது. | கணனி முறைமை தாபிக்கப்பட்டதன் பின்னர் செலுத்துவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் செயற்படு நிலைமையினை மதிப்பீடு செய்து செலுத்துதல் வேண்டும். |
| (எ) | மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகள் செய்யப்பட்ட போதிலும் 2020 செப்தெம்பர் 21 வரை இருப்பு மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பான மென்பொருள் முறைமை அமுல்படுத்தப்படாதிருந்த துடன் அதற்காக ரூபா 690,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | களஞ்சிய மீதி தொடர்பான தகவல்களை உள்ளடக்குதல் வலைப்பின்னல் படுத்தலின் வழுக்களின் அடிப்படையில் தாமதமடைந்திருந்ததுடன் கொரோனா நிலைமையின் அடிப்படையில் முறைமையை தாபித்த நிறுவனத்தை தொடர்பு கொள்வதற்கு முடியாதிருந்தமையால் எதிர்காலத்தில் சரியான பிரகாரம் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மென்பொருள் முறைமையை தாபித்து செயற்படு நிலைமையினை மதிப்பீடு செய்து கொடுப்பனவு செய்தல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் செயலாளர் பதவிக்காக நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் இருக்க வேண்டிய போதிலும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | காணப்படுகின்ற வெற்றிடங்களை சபை அறிவித்துள்ளதுடன் வெற்றிடங்கள் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடமொன்று காணப்படாதிருக்கும் போது தற்காலிக அடிப்படையில் ஒரு வைத்தியர் சேர்க்கப்பட்டிருந்தார். | அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ உத்தியோகத்தரின் விடுமுறையை மேவுகை செய்வதற்காக இவ்வாறு நியமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் வைத்தியர் ஒருவரின் பதவிக்கான தேவை காணப்படுகின்றமையால் அங்கீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | வெற்றிடமான பதவிகளுக்கான மாத்திரம் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | முன்பள்ளி பாடசாலை ஆசிரிய உதவியாளர் பதவிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஊழியர் எண்ணிக்கையொன்று காணப்படாதிருக்கும் போது அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் மூன்று பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். | முன்பள்ளி பாடசாலை நிதியத்திலிருந்து படிகளை செலுத்துவதன் கீழ் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | வெற்றிடமான பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும். |